# திருமூலர்

- திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது.
- திருமூலர் ஒரு சித்தர்.
- மூலன் என்பவன் ஓர் இடையன்.
- பசுவின் துயர் நீக்க வேண்டிச் சித்தர் இம் மூலனின் உடலுக்குள் கூடுவிட்டுக் கூடுபாய்ந்தார்.
- இது நடந்த ஊர் காவிரிக்கரையில் உள்ள சாத்தனூர்.
- சித்தரின் இயற்பெயர் தெரியவில்லை.
- திருவாவடுதுறையில் யோகத்தில் ஆழ்ந்தார்.
- திருவாவடுதுறைக்கு நவகோடி சித்தபுரம் என்ற பெயரும் உண்டு.
- 3000 ஆண்டுகள் வாழ்ந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களைப் பாடினார் என்பர்.
- திருமந்திரத்திற்கு ஆசிரியர் இட்ட பெயர் திருமந்திர மாலை. இதற்குத் தமிழ் மூவாயிரம் என்ற பெயரும் உண்டு.
- திருமந்திரம் 9 தந்திரங்களையும் 232 அதிகாரங்களையும் 3071 பாடல்களையும் கொண்டுள்ளது.
- முதல் சித்த நூல் திருமந்திரம்.
- யோக நெறியைக் கூறும் தமிழின் ஒரே நூல் திருமந்திரம்.
- சைவசித்தாந்த சாத்திரங்கள் தோன்றுவதற்கு முன்பு சைவசமய முதல் நூலாக விளங்கியது திருமந்திரம்.
- சைவசித்தாந்தம் என்ற தொடர் முதன்முதலில் இடம் பெற்ற நூல் திருமந்திரம்.
- இதன் பாடல்கள் கலிவிருத்தம் என்ற ஒரே வகை செய்யுளால் ஒரே நடையில் எழுதப்பட்டுள்ளன.
- இதன் பாடல்கள் பெரும்பாலும் உருவங்களாக – மறைபொருள் உடையதாக உள்ளன.

------****-------****----